සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

මගේ අංකය
எனது இல
My No

ඔබේ අංකය
உமது இல: ........................................
Your No

දිනය
திகதி :
Date

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 33(9) பிரிவின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைய வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள்:- 2018/03

# "எமது பாரம்பரியத்தை பேணுவோம் - சேமிப்புக்கு வழிகோருவோம்" சிங்கள/தமிழ் புத்தாண்டு விழாவிற்கு இணைவாக சேமிப்பு மேம்பாட்டு மற்றும் புத்தாண்டு விழா வேலைத்திட்டம் - 2018

## 01). அறிமுகம் :-

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் சிங்கள/தமிழ் புதுவருடத்தினை வங்கியின் வாடிக்கையாளர்கள் உட்பட அனைத்து மக்களுடனும் இணைந்து கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பினால் சிங்கள/தமிழ் சம்பிரதாயங்களுடன் கூடிய கிராமிய விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி "எமது பாரம்பரியத்தை பேணுவோம் - சேமிப்பு வழிகோருவோம்" எனும் தொனிப்பொருளில் வேலைத்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 02). செயற்படுத்தவுள்ள வேலைத்திட்டங்கள்

i. சிங்கள/தமிழ் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம்
ii. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக புத்தாண்டு கொண்டாட்டங்களை நடாத்துதல்
iii. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கூடுதலான அர்ப்பணிப்புக்களை மேற்கொண்ட வங்கி/உத்தியோகத்தர்களை பாராட்டுதல்

## 03). சிங்கள/தமிழ் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம்

3.1 2018 ஆம் ஆண்டின் சிங்கள/தமிழ் புத்தாண்டின் பொருட்டு கொடுக்கல் வாங்கல்கள் மரபுகளை இம்முறை சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு நாடு முழுவதும் அமைந்துள்ள அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். இம்மரபுகளின் பொருட்டு அனைத்து சமுர்த்தி வங்கிகளும் **2018.04.16ஆம்** திகதி திறந்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டும்.

3.2 புத்தாண்டின் பொருட்டு **2018.04.16ஆம்** திகதி சமுதாய அடிப்படை வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிங்கள/தமிழ் பாரம்பரியத்துக்கு அமைய ரூபா.10.00 நாணயம் வெற்றிலையில் வைத்து அன்பளிப்பாக வழங்குவதற்கு

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail-dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office
011-2887280
Hot Line: 011- 2887722

நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ் அன்பளிப்பு வங்கிக்கு வருகைதந்து பணத்தினை வைப்புச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படல் வேண்டும். இச்செயற்பாட்டுக்கு முன் ஆயத்தங்களை செய்துகொள்ள வேண்டுவதுடன் இதற்காக ஏற்படும் உண்மையான செலவுகளை **செலவுக்குணக்கு – வங்கி மேம்பாட்டு நடவடிக்கைகள்** கணக்கில் பற்று வைத்து பொதுப்பேரேட்டு பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

3.3 2018.04.16 ஆம் திகதி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளைத் திறந்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு மேலதிகமாக **சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியில் இருந்து 25 ஆம் திகதி வரை** இவ்விரண்டு தினங்களும் அடங்கலாக இக்காலம் முழுவதும் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் செயற்படுத்தல் வேண்டும்.

3.4 இதற்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் கடமையாற்றும் சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இலக்குகள் வழங்கப்படல் வேண்டும். அதற்கமைய ஒரு பிரிவில் வைப்புக்கணக்குகளுக்கு (கட்டாய சேமிப்பு மற்றும் குழுச்சேமிப்பு தவிர) வைப்புத் தொகையாக ரூபா.100,000/= அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை சேமிப்பதற்கு இலக்கு வழங்கப்படல் வேண்டும். இம்முறை சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் குழுச் சேமிப்பு வைப்புக்களுக்கு சேமிப்புகளை சேகரித்தல் இலக்கு வழங்கல்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. காரணம் வைப்புத்தொகைகளுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கும் போது இங்கு சிக்கல்கள் ஏற்படலாம் என்பதனால் ஆகும்.

3.5 சிங்கள/தமிழ் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி ஒன்று தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து வைப்புக்களின் பொருட்டும் (கட்டாய சேமிப்பு, குழுவைப்பு தவிர) சேமிப்பு மேம்பாட்டுக் காலத்தினுள் 1.2 மில்லியன் ரூபாவினை சேமிப்பாக சேகரித்தல் வேண்டும். (கள வைப்புக்களுக்கான இலக்குகள் அடங்கலாக) ஆனால் ஏதேனும் சமுர்த்தி வங்கிகளில் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 10ஐ விட குறைவாக இருப்பின் அவ்வங்கியின் வைப்பு இலக்கு 1 மில்லியன் ரூபாவாக அமையும்.

3.6 இச்சேமிப்பு மேம்பாட்டு காலத்தினுள் இம்மேம்பாட்டு வேலைத்திட்டதினை செயற்படுத்துவதற்கு கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களினதும், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் நிருவாக சபை உறுப்பினர்களினதும் நேரடியான பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.7 சேமிப்பு மேம்பாட்டுக் காலத்தினுள் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு வைப்புச் செய்யப்படும் தொகை ரூபா.2,500/= இனை அல்லது அதனை விட அதிகரிக்கும் தொகையினை, வைப்புச் செய்யும் திகதியில் இருந்து 01 வருட காலத்திற்கு வங்கியின் வைப்பாக தேக்கி வைத்தல் அவசியமாகும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**4. சேமிப்பு வைப்புக்களின் பொருட்டு நினைவுப் பரிசில்களை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் மற்றும் நினைவுப் பரிசில்கள் வழங்கலும்.**

4.1 2018ஆம் ஆண்டின் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டதின் கிழ் சேமிப்பு வைப்புக்களுக்கு (சிறுவர்/ சிசுரக்க வைப்புக்கள் தவிர) கீழ் குறிப்பிடப்படும் நினைவுப் பரிசில்களை வழங்குவது பொருத்தமானதாக அமையும்.

| வைப்புத் தொகையின் அளவு (ரூபா) | பரிசுப் பொருள் | ஒருவருக்கு செலவு செய்யக் கூடிய உயர்ந்தபட்சத் தொகை (ரூபா) |
|---|---|---|
| ரூ.2,500 – 4,999 வரை | பொருந்தக் கூடிய பொருத்தமான பரிசு | 125.00 |
| ரூ.5,000 - 7,499 வரை | மக்(Mug) | 250.00 |
| ரூ.7,500 – 9,999 வரை | குடை (பெண்கள்) | 350.00 |
| ரூ.10,000– 14,999 வரை | குடை (பெரிது) | 500.00 |
| ரூ.15,000– 29,999 வரை | மின்சாரத்தில் சார்ஜ்பண்ணக் கூடிய டோர்ச்லைட் / Iron Box | 750.00 |
| ரூ.30,000– 49,999 வரை | மின்சார கேற்றல் (1.2L) | 1,500.00 |
| ரூ.50,000– 79,999 வரை | விசில்மின்சாரக் கேற்றல் (1.8L) | 2,250.00 |
| ரூ.80,000– 99,000 வரை | மேசை மின்விசிறி(16’’) | 4,000.00 |
| ரூ.100,000 க்கு மேல் | நிறுத்தல் மின்விசிறி (16’’) | 5,000.00 |

4.2 மேற்படி 4.1 நிரலில் குறிப்பிட்டுள்ள அலகொன்றின் அதிகூடிய விலைக்கு சமமான அல்லது அதைவிட குறைவான விலையில் காணப்படும் பொருள் வகையினை தெரிவு செய்வது பொருத்தமானதாகும். இச் சந்தர்ப்பத்தில் அதற்குக் மேல் உள்ள அலகின் விலையைவிட குறைவான தயாரிப்புக்களை தெரிவு செய்வது பொருத்தமற்றதாக அமையும்.

4.3 சிசுரக்க/ சிறுவர் சேமிப்பு கணக்குகளின் பொருட்டு மேற்படி 4.1இல் குறிப்பிட்டுள்ள பணப் பெறுமதிக்கு மேற்படாத வகையில் வங்கி வேலைத்திட்டத்தின் பெயர் பிரபலமாகும் விதத்தில் சிறுவர்களின் வயதுக்கு அமைய கல்வி மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு பொருத்தமான பரிசுப் பொருட்களை தாங்கள் தெரிவு செய்துகொள்ள முடியும். மேலும் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் சிறுவர்/ சிசுரக்க ஆகிய கணக்குகளுக்கு பணத்தை வைப்புச் செய்யும் சகல சிறுவர்களுக்கும் பணம் சேமிக்கும் உண்டியல் ஒன்று (பிலாஸ்டிக்) வழங்கப்படல் வேண்டும். அவ்வுண்டியல் 2019 ஆம் ஆண்டின் சிங்கள, தமிழ் புத்தாண்டுச் சேமிப்பு வேலைத்திட்ட காலத்தினுள் அல்லது அதற்கு முன்னர் வங்கியில் பாரமெடுத்து சேமித்துள்ள தொகையினை உரியவரின் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக புதிதாக பணம் சேமிக்கம் உண்டியல் ஒன்றினை வழங்கவும் முடியும்.

4.4 பரிசுப் பொருட்களுக்கு பொருத்தமான நிறுவனங்களை தெரிவு செய்யும் பொறுப்பு மாவட்ட சமுர்த்திப் பிரிவிற்கு வழங்கப்படுகிறது. இங்கு கேள்வி கோரல் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். கீழ் பெயர் குறிப்பிடப்படும் நிறுவனங்களில் இருந்து விலைமனுக்களை கோரும்போது அந்நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக மாத்திரமே விலைமனுக்கள் கோரப்படல் வேண்டும். இவ்வாறு நிறுவனங்களின் பெயர் குறிப்பிடுவதற்கான காரணம் தரமான பரிசுப் பொருட்களை நாடுபூராகவும் பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தினூடாக வழங்குவதை நோக்காக கொண்டதாகும். இங்கு 2016 ஆம் ஆண்டு புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு பரிசுப் பொருட்கள் பெற்றுக்கொண்ட நிறுவனங்களுடன் கீழ்வரும் நிறுவனங்களும் உள்ளடக்கப்படுகின்றது.

4.5 புத்தாண்டு பரிசுகளை தெரிவு செய்யும் போது கீழ்வரும் நிறுவனங்களின் பிரதான காரியாலயத்தினூடாக மாத்திரம் விலைமனுக்கள் கோரப்படல் வேண்டம். பிரதேச காரியாலயங்கள்/ விற்பனை முகவர் நிலையங்களினுடாக முன்வைக்கப்படும் கூறு விலைகளை விட குறைவான விலையினை தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்வதனால் அதன் இலாபத்தினை சமுர்த்தி வங்கிகள் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

| பொருட்களின் வகை | கூறுவிலை கோரவேண்டிய உற்பத்தியாளர்/ நிறுவனம் | உற்பத்தியாளர்/ நிறுவனத்தின் முகவரி |
|---|---|---|
| மின்சார உபகரணங்கள் | I. L.G அபான்ஸ் கம்பனி | இல.498, காலி வீதி, கொழும்பு – 03 |
| | II. சிங்கர் லங்கா கம்பனி | சிங்கர் மெகாகோம், இல.80, நவம் மாவத்தை, கொழும்பு - 02 |
| | III. தினபால வ/ப கம்பனி | இல.14, அனகாரிகதர்மபால மாவத்தை, கண்டி. |
| | IV. தம்ரோ நிறுவனம் | இல.361, கண்டி வீதி, நித்தம்புவ. |
| | V. டெலிசொனிக் லங்கா(Pvt) கம்பனி | இல.18, டெசிவிலா அவனியு, கொழும்பு – 04 |
| | VI. சொப்ற்லோஜிக் (Pvt) கம்பனி | இல.402, காலி வீதி, கொழும்பு – 03 |
| | VII. சிங்ககிரி (Pvt) கம்பனி | இல.515,T.B ஜயா மாவத்தை, கொழும்பு- 10 |
| குடை | I. ரெயின்கோ (Rainco) (Pvt) கம்பனி | இல.415, காலி வீதி, கொழும்பு – 04. |
| | II. கந்துரட்ட குடை தயாரிப்பாளர் (Penguin) | இல.660, கொழும்பு வீதி, கடுகண்ணாவ |
| | III. வேறு பொருத்தமான நிறுவனம் | ---------------- |
| மக் (Mug) உட்பட ஏனைய பிரிவுகள் (சிறுவர் கணக்கு உட்பட) | பொருத்தமான நிறுவனம் | ------------------------ |

4.6 சமுர்த்தி வங்கிகளுக்குத் தேவையான பரிசுப் பொருட்களின் அளவு தொடர்பாக அண்ணளவான தொகையினை வங்கிகளில் இருந்து பெற்று கேள்வி கோரல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். மேலும் நிறுவனங்களில் இருந்து விலைமனுக்களை கோரும் போது உரிய பொருட்களை சமுர்த்தி வங்கிக்கு கொண்டு வந்து வழங்குவதற்கான இணக்கப்பாட்டினையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் பரிசுப் பொருட்களில் **"சமுர்த்தி வங்கி"** என அச்சிட்டு அல்லது ஸ்டிக்கர் ஒட்டி வழங்க வேண்டியது கட்டாயமாகும். இவை கூறுவிலை கோரும்போது வழங்குநர்களினால் கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதை குறிப்பிடல் வேண்டும். (குடை போன்றவற்றில் சமுர்த்தி வங்கி என்பது கட்டாயமாக அச்சிடல் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.7 மாவட்ட சமுர்த்திப் பிரிவு 2018.03.15 ஆம் திகதிக்கு முன்னர் கேள்வி கோரல் நடைமுறைகளை மேற்கொண்டு உரிய நிறுவனங்களை தெரிவு செய்து கொள்ளவேண்டும். அதற்கு மேலதிகமாக வங்கிகளில் காட்சிப்படுத்தும் பொருட்டு பரிசுப் பொருட்களின் மாதிரிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (மிக விரைவாக கேள்வி கோரல் நடைமுறைகளை மேற்கொளப்படுமாயின் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இலகுவாக அமையும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.)

4.8 சமுர்த்தி வங்கிகள் பரிசுப் பொருட்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை மிக விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.9 அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்புக் கணக்கிற்கு வைப்புக்களை சேமிக்கும் போது சுயாதீன அமைப்புக்கள் / சங்கங்கங்களின் பெயரில் செயற்படுத்தப்படுகின்ற கணக்குகளில் அவர்களின் கோரிக்கைக்கு அமைய மேற்படி வைபப்புத்தொகை எல்லைக்குட்பட்ட விதத்தில் சங்கம் / அமைப்புகளினால் பயன்படுத்தக் கூடிய விதத்திலான பொருத்தமான பரிசுப் பொருட்களை வழங்குவதற்கு இடமளிக்கப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தில் மாவட்ட அல்லது பிரதேச கேள்விச் சபையினூடாக கேள்விச் சபை வழிகாட்டல்களுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**5. வங்கி வலய மட்டத்தில் புத்தாண்டு விழாக்கள் நடாத்தல்**

5.1 நாடு முழுவதும் அமைந்துள்ள அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் தமது வலயத்தினுள் ஒரு புத்தாண்டு விழாவினை ஏற்பாடு செய்து நடாத்த வேண்டியது கட்டாயமாகும்.

5.2 புத்தாண்டு விழா **2018.04.22** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் பிரகாரம் ஒரே நாளில் 1074 புத்தாண்டு விழாக்கள் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதே போல் வேறு அமைப்புக்கள்/ நிறுவனங்களினூடாக ஏற்பாடு செய்யும் நிகழ்வுகள் மற்றும் சமுர்த்தி வங்கிகள் ஒன்றினைந்து புத்தாண்டு விழா நடாத்துதல் என்பன முடியாத விடயமாகும். ஆனால் அத்தியவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் குறுநிதிப் பணிப்பாளருக்க எழுத்து மூலம் அறிவித்து அனுமதியினை பெற்ற பின்னர் அவ்வாறான நிகழ்வுகளை நடாத்த முடியும்.

5.3 மேலே பந்தி இலக்கம் 5.2 குறிப்பிட்டுள்ள பிரகாரம் உரிய தினத்தில் விசேட காரணங்களின் நிமித்தம் புத்தாண்டு விழாவினை நடாத்த முடியாது போனால் அடுத்துவரும் முதல் வாரத்தில் வார இறுதி நாள் ஒன்றை தெரிவு செய்துகொள்ள வேண்டும். இதற்கான முன் அனுமதியினை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவிற்கு தெரியப்படுத்த வேண்டியது கட்டாயமாகும். (புத்தாண்டுச் செலவினங்கள் மீளளிப்புச் செய்யும் போது உரிய திகதி மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டதாக விசேட குறிப்புகளை மாவட்ட பணிப்பாளர் இடவேண்டும்.)ஷ

5.4 கிராமிய விளையாட்டுக்களுக்கு முன்னுரிமை வழங்கி வங்கிச் செயற்பாடுகள் வளர்ச்சியடையக் கூடிய வகையில் புத்தாண்டு விழாக்கள் நடாத்தப்படல் வேண்டும்.

5.5 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியினால் ஒழுங்கு செய்யப்படும் புத்தாண்டு விழாவுக்கு அவசியமான செலவுகளை சிக்கனப்படுத்திக் கொள்வதுடன் இதற்காகக் உயர்ந்தபட்ச ரூபா.50,000/= செலவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இத்தொகையில் ரூபா.15,000/= சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவினால் குறித்த வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்படுவதுடன் செலவாகும் மீதித் தொகையினை கூடியது ரூபா.35,000/= இற்கு உட்பட்டவிதத்தில் வங்கி நிதியில் இருந்து செலவு செய்யமுடியும். அச்செலவுத் தொகையினை பின்வருமாறு கணக்கு வைத்தல் வேண்டும். சமுதாய அடிப்படை பிரிவினால் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கினை பூரணப்படுத்தினால் மாத்திரமே மீள் நிதியீட்டத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

பற்று – சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கத்தினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய நிதியக் கணக்கு (சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவினால் மீளளிப்புச் செய்யப்படும் தொகை)

பற்று- செலவுக் கணக்கு – விழா நடவடிக்கைகள்

வரவு – நடைமுறைக் கணக்கு / காசுக் கணக்கு

5.6 ஏதாவது சந்தர்ப்பம் ஒன்றில் சேமிப்பு இலக்கினை பூர்த்தி செய்ய முடியாதிருந்து புத்தாண்டு விழா நடாத்துவதற்கான ரூபா.15,000/= தொகையினை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய நிதியக் கணக்கில் கணக்கு வைத்திருப்பின் அதனை மாற்றுப் பதிவுகள் மூலம் வங்கிச் செலவாக கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

5.7 புத்தாண்டு கொண்டாட்டங்களை நடாத்தி மே மாதம் 08 ஆம் திகதிக்கு முன்னர் மீளளிப்புச் செய்ய வேண்டிய நிதி சம்பந்தமான தகவல்களை படிவ இலக்கம் - 04க்கு அமைய பூரணப்படுத்தி பிரதேச செயலாளரின் சிபரிசுடன் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மாவட்ட சமுர்த்திப் பிரிவின் குறுநிதி விடயப் பொறுப்பு முகாமையாளர் மாவட்டத்தின் சகல வங்கிகளில் இருந்தும் கோரப்படும் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய நிதி சம்பந்தமான அறிக்கையினை இணைப்பு – 05 படிவத்தில் தயாரித்து 2018.05.23 ஆம் திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டியது கட்டாயமாகும். இதன் பின்னர் செய்யப்படும் கோரிக்கைகளுக்கு நிதி மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

5.8 புத்தாண்டு விழா நடவடிக்கையின் பொருட்டு வெளி அமைப்புக்கள் / நபர்களின் உதவி உபகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது தொடர்பாக தனியான கோவையினை பராமரிக்குமாறும் வேண்டப்படுகின்றீர்.

**6. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் செயற்பாடுகள்.**

6.1 தேசிய மற்றும் மாவட்ட இலக்கினை அடைந்துகொள்வதற்கு ஏற்றவிதத்தில் வங்கிச் சங்கத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (தங்களது வங்கிச் சங்க அதிகார பிரதேசத்தினுள் சகல கிராம சேவகர் பிரிவுகளினதும் இலக்கினை ஒன்று சேர்த்து வங்கிச் சங்கத்தின் இலக்கினை தயார் செய்துகொள்ள வேண்டும்.) இங்கு இலக்கினை பூர்த்தி செய்யும் வங்கிச் சங்கம் மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் பாராட்டுதலுக்க உட்படுத்தப்படவுள்ளது.

6.2 வங்கிச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்துக்குரிய சகல வங்கிகளினதும் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல், சேமிப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் புத்தாண்டு விழா நடாத்தல் போன்றதற்கு வங்கிச் சங்க முகாமையாளர் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புக்களை வழங்க வேண்டும்.

6.3 வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தினை வழங்கப்பட்டுள்ள அறிவுரைக்கமைய மாவட்ட சமுர்த்தி பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

6.4 புத்தாண்டு விழாவுக்காக நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதுடன் சேமிப்பு மேம்படுத்தல் வேலைத்திட்டம் பற்றிய அறிவூட்டல்கள் சமுதாய கட்டமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**7. மாவட்ட சமுர்த்தி பிரிவின் செயற் பொறுப்புகள்**

7.1 வைப்புக்களுக்கான பரிசுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான கேள்வி கோரல் நடவடிக்கைகளை மேற்கொண்டு கேள்விச் சபை வழிகாட்டல்கள், நிதிப் பிரமானங்களுக்கு அமைய பொருத்தமான நிறுவனத்தை தெரிவு செய்து பரிசுப் பொருட்களை விரைவாக வங்கிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

7.2 மாவட்டத்தின் அனைத்து சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களுக்கு இச் சுற்றுநிருப ஆலோசனைகளுக்கு அமைய உரிய வேலைத்திட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இலக்கினை அடைந்து கொள்வதற்கு தேவையான அறிவூட்டல்களை மேற்கொள்ளவேண்டும்.

7.3 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்துக்கு அமைய ஒவ்வொரு வங்கிக்கும் வழங்கப்பட்டுள்ள இலக்கினை அடிப்படையாகக் கொண்டு மாவட்டத்தின் சகல கிராம சேவகர் பிரிவுகளினதும் இலக்கினை தயார் செய்து கொள்ளல்.

7.4 புத்தாண்டு கொண்டாடத்தினை குறித்த தினம் தவிர்ந்த வேறு ஒரு தினத்தில் கொண்டாட முன் வைக்கப்படும் கோரிக்கைக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் அது தொடர்பாக முன்வைக்கும் காரணங்களை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இருந்தால் மாத்திரம் அதற்கு அனுமதி வழங்குவதுடன், அது தொடர்பாக சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு அறிவித்தல் வேண்டும்.

7.5 மாவட்டத்தின் சமுதாய அடிப்படை வங்கிகளால் புத்தாண்டு விழாக்கள் ஏற்பாடு செய்துள்ள இடங்கள் தொடர்பான தகவல்களை **2018.04.12** ஆம் திகதிக்கு முன்னர் வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல்.

7.6 புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு விழாக்களுக்காக மாவட்ட சமுர்த்தி பிரிவு உத்தியோகத்தர்களின் பங்குபற்றல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7.7 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலக்கினை பூரணப்படுத்திய மற்றும் கூடிய வைப்புக்களை சேகரித்த உத்தியோகத்தர்களை/ வங்கிகளை, வங்கி/ வங்கிச் சங்க மட்டத்தில் பாராட்டுதல்.

7.8 முன்னேற்ற அறிக்கைகளை உரிய முறையில் பெற்று அதனை வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல்.

**8. முன்னேற்ற அறிக்கை மற்றும் மீளளிப்புக்கான நிதிகோரலும்.**

8.1

| அறிக்கை இட வேண்டிய வங்கி / பிரிவு | அறிக்கை அனுப்ப வேண்டிய திகதி | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் | அறிக்கை ஒப்படைக்க வேண்டிய வங்கி/பிரிவு | அறிக்கை இடுவதற்கு பாவிக்க வேண்டிய படிவம் |
|---|---|---|---|---|
| **சேமிப்பு திரட்டலின் முன்னேற்றம்** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி | 2018.05.08 | வங்கி முகாயைமாளர் | சமுர்த்தி அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு | இணைப்பு 01<br>இணைப்பு 06 |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | 2018.05.15 | வங்கிச் சங்க முகாமையாளர் | சமுர்த்தி மாவட்ட அலகிற்கு | இணைப்பு 02<br>இணைப்பு 06 |

| | | | | |
|---|---|---|---|---|
| சமுர்த்தி மாவட்ட அலகு | 2018.05.23 | மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் | சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு | இணைப்பு 03<br>இணைப்பு 06 |
| **<u>புத்தாண்டு செலவு மீளளிப்புக்கான கோரிக்கை</u>**<br>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி | 2018.05.05 | வங்கி முகாமையாளர் | சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | இணைப்பு 04 |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | 2018.05.15 | வங்கிச் சங்க முகாமையாளர் | சமுர்த்தி மாவட்ட அலகு | இணைப்பு 04 |
| சமுர்த்தி மாவட்ட அலகு | 2018.05.31 | மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் | சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு | இணைப்பு 05 |

8.2 புத்தாண்டு விழாச் செலவுகள் மீளளிப்புச் செய்வதற்கு **2018.05.23** ஆம் திகதி வரை காலம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னர் வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு நிதி வழங்கப்படமாட்டாது.

**9. உத்தியோகத்தர் பாராட்டும் நற்சான்றிதழ் வழங்கலும்**

9.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினால் வங்கிகளின் அதிகாரப் பிரதேசத்தின் கிராம சேவகர் பிரிவுகளில் தனது இலக்கினை தாண்டி சேமிப்புக்களை திரட்டிய உத்தியோகத்தர் 10 பேரை தெரிவு செய்து அவர்களுக்கு பிரதேச செயலாளரின் வழிகாட்டலுக்கு அமைய நினைவுச் சின்னம் மற்றும் நற்சான்றிதழ்கள் வழங்கல் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான சேமிப்பு தொகையினை சேகரித்த வங்கி முகாமையாளர் உட்பட பணிக்குழுவினை பாராட்டி நற்சான்றிதழ் வழங்குதல்.

9.2 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தால் இன் நற்சான்றிதழ் வழங்கப்படும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்காக ரூபா.10,000.00 இற்கு மேற்படாத தொகையினை வங்கிச் சங்க நிதியில் இருந்து செலவிடுவதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்பட்டுகின்றது. செலவிடப்படும் தொகை **செலவுக்கணக்கு – விழா நடவடிக்கைகள் கணக்கில்** பற்று வைக்கவும்.

9.3 மாவட்ட சமுர்த்திப் பிரிவினால் மாவட்டத்தில் இலக்கினை தாண்டி கூடுதலான சேமிப்பினை ஒன்று சேர்த்த சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் மூன்றினை(03) தெரிவு செய்து அந்த வங்கிச் சங்க முகாமையாளார், வங்கிச் சங்க பணிக்குழுவினருக்கான சான்றிதழ்களை வழங்க வேண்டும். (வங்கிச் சங்கத்தின் கீழ் இயங்கும் அனைத்து வங்கிகளும் சேகரித்த வைப்புத் தொகையினதும் மொத்தத்தினை வங்கிகளின் எண்ணிக்கையில் பிரித்து சராசரியினை பெறல் வேண்டும்)

9.4 மாவட்ட மட்டத்தில் சேமிப்பு மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் கூடுதலான சேமிப்புத் தொகையினை சேகரித்த மற்றும் அதற்காக பாரிய முயற்சிகளை மேற்கொண்ட வங்கி/

கள உத்தியோகத்தர்களை பாராட்டுதல் வேண்டும். ஓவ்வொரு மாவட்டத்திலும் வங்கிகள் மற்றும் களப்பிரிவுகளின் எண்ணிக்கை என்பன வேறுபடுவதன் காரணத்தால் பாராட்டப்பட வேண்டிய கள உத்தியோகத்தர்கள்/ வங்கிகளின் எண்ணிக்கைகள் மற்றும் பாராட்டு விழா ஏற்பாடுகளுக்கு வழங்கப்படும் நிதியின் அளவு என்பன கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் அமைவதுடன் இதற்கான நிதி சமுர்த்தி சமுதாய வங்கிப் பிரிவினால் வழங்கப்படவுள்ளது. மாவட்ட பாராட்டுதல் நடவடிக்கைகள் 2018.08.30 ஆம் திகதிக்கு முன்னர் முடித்தல் வேண்டும்.

| மாவட்டத்தில் அமைந்துள்ள வங்கிகளின் எண்ணிக்கை | பாராட்டப்பட வேண்டிய | | வழங்கப்படும் நிதி (ரூபா) |
|---|---|---|---|
| | கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வங்கிகளின் எண்ணிக்கை | |
| 50தை விட குறைவு | 10 | 10 | 50,000.00 |
| 51 – 100க்கு குறைவு | 12 | 12 | 75,000.00 |
| 101க்கு மேல் | 15 | 15 | 100,000.00 |

9.5 மாவட்டத்தில் கூடிய வைப்புத் தொகையினை சேகரித்த வங்கிகளைப் பாராட்டும் போது அவ்வங்கிப் பணக் குழுவினரையும் வங்கியின் அதிகாரப் பிரதேசத்தின் கள உத்தியோகத்தர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கள் வேண்டும். (இலக்கினை பூர்த்தி செய்தவர்களுக்கு)

9.6 2018 சிங்கள/ தமிழ் புத்தாண்டு சேமிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் சேமிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள இலக்கினை அடைந்து கொள்வதற்கு சமுர்த்தி நலனுதவித் தொகையினை அல்லது வேறு கொடுப்பனவில் ஒரு பகுதியினை சேமிப்பாக வைப்புச் செய்யுமாறு பயனாளிகளை கட்டாயப்படுத்தாமல் இருக்க வேண்டியதுடன் அவ்வாறு கட்டாயப்படுத்தியதாக உறுதிப்படுத்தப்பட்டால் உரிய கள உத்தியோகத்தர் மற்றும் வங்கி பாராட்டப்படும் நடவடிக்கைகளில் இருந்து பூரணமாக வெளியேற்றப்படும். (அதேபோல் வைப்புத் தொகையினை ஒரு வருட காலத்திற்கு வங்கியில் தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்காத வங்கிகளும்(கள உத்தியோகத்தர் தவிர) பாராட்டு நடவடிக்கைகளில் இருந்து வெளியேற்றப்படுவர்.) இவ்வாறு செயற்பட்டதால் வங்கிகளுக்கு ஏற்படும் நட்டம் தொடர்பாக உரிய உத்தியோகத்தர் பொறுப்புக் கூற வேண்டுமென்பதையும் குறிப்பிட விரம்புகிறேன்.

9.7 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலக்கினை அடைந்து கொள்வதற்கு வங்கி கடன்களை விடுவித்து அதனை வைப்பாக மீண்டும் வங்கியில் பெற்றுக்கொள்வதாக கடந்த வருடம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையினை தவிர்த்துக்கொள்ளுமாறும் வேண்டுகின்றேன்.

**10. 2018.04.22 ஆம் திகதி புத்தாண்டு விழா கடமைகளில் ஈடுபடும் வங்கி மற்றும் களப் பணிக்குழுவினருக்கு ஒரு நாள் சம்பளத்தினை வங்கி நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.** மேலும் புத்தாண்டு விழா கடமைகளில் ஈடுபடும் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் உள்ளிட்ட பணிக்குழுவினரும் வங்கிச் சங்கத்தில் இருந்து ஒரு சம்பளத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

**11. விசேட விடயங்கள்**

11.1 சேமிப்பு வாரத்தினுள் கள உத்தியோகத்தர்கள் சேகரிக்கும் வைப்புத் தொகையினை 2018.04.27 ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் ஒப்படைக்க வேண்டும். அதற்கு பின்னர் வங்கியில் ஒப்படைக்கப்படும் தொகை இலக்கு பூர்த்தி செய்தல் மற்றும் பாராட்டுதல் நடவடிக்கைகளுக்கு தகுதியற்றதாக கருதப்படும்.

11.2 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வங்கியின் சகல வாடிக்கையாளர்களையும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வருமாறு அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏந்த சந்தர்ப்பத்திலும் சுற்றுநிருப ஆலோசனைகளில் கூறப்பட்டுள்ள இலக்கினை அடைந்து கொள்வதற்காக வாடிக்கையாளர்களை வற்புறுத்தாமல் கடந்த காலங்களில் இடம்பெற்ற நட்புரீதியான சேமிப்பு மேம்பாட்டின் முக்கியத்துவத்தினை நினைவூட்டுவதுடன் அம் முக்கியத்துவத்தினை இம் முறையும் அதிகமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றேன்.

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்தின,
பணிப்பாளர் நாயகம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.

Translated By:- I Aliyar.

**இணைப்பு – 01**

**புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரித்த வைப்புக்களின் முன்னேற்றம் -2018**

01. புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களின் முன்னேற்றம்(மேம்பாட்டுக் காலத்தினுள் வங்கி மற்றும் களத்தில் சேகரித்த தொகை)

| கணக்குகளின் வகை | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

02. சமுர்த்தி கள உத்தியோகத்தர்களினால் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு காலத்தினுள் சேகரித்த வைப்புக்களின் முன்னேறற்றம்

| பிரிவு | பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தரின் பெயர் | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| **மொத்தம்** | | | |

தயாரித்தவர்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

முகாமையாளர் உறுதிப்படுத்தல்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

**இணைப்பு – 02**

**புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் பத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரித்த வைப்புக்களின் முன்னேற்றம் -2018**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம் : ………………………………..

01. புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு முன்னேற்றம்

| வங்கி | புத்தாண்டு சேமிப்பு காலத்தினுள் வைப்புக்களின் முன்னேற்றம் | |
|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
| | | |
| | | |
| | | |
| | | |
| **மொத்தம்** | | |

02. சமுர்த்தி கள உத்தியோகத்தர்களினால் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு காலத்தினுள் சேகரித்த வைப்புக்களின் முன்னேறற்றம்

| பிரிவு | பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தரின் பெயர் | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| **மொத்தம்** | | | |

தயாரித்தவர்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

முகாமையாளர் உறுதிப்படுத்தல்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

**இணைப்பு – 03**

**<u>புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் பத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரித்த வைப்புக்களின் முன்னேற்றம் -2018</u>**

மாவட்டம் : …………………………………..

01. புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு முன்னேற்றம்

| **வங்கி** | **புத்தாண்டு சேமிப்பு காலத்தினுள் வைப்பக்களின் முன்னேற்றம்** | |
|---|---|---|
| | **கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சேகரித்த வைப்புத் தொகை ரூபா** |
| | | |
| | | |
| | | |
| | | |
| **மொத்தம்** | | |

02. சமுர்த்தி கள உத்தியோகத்தர்களினால் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு காலத்தினுள் சேகரித்த வைப்புக்களின் முன்னேறற்றம் - 2018
(மாவட்டத்தினுள் அதி கூடிய சேமிப்பினைச் சேகரித்த உத்தியோகத்தர்களில் 25 பேர் மாத்திரம்)

| **பிரிவு** | **பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தரின் பெயர்** | **கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சேகரித்த வைப்புத் தொகை ரூபா** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

தயாரித்தவர்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

சமுர்த்திப் பணிப்பாளர் உறுதிப்படுத்தல்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

இணைப்பு – 04

………………

2018…………

மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்,
மாவட்ட செயலகம்,
……………………

## புத்தாண்டு கொண்டாட்டம் நடாத்தல் மற்றும் மீள்நிதியீட்டம் கோரல்

……………………… சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம்.

| வங்கியின் பெயர் | புத்தாண்டு விழா நடைபெற்ற திகதி | சேகரித்த வைப்புத் தொகை | மேற்கொண்ட மொத்த செலவு | மீள்நிதியீட்டம் கோரும் தொகை | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தயாரித்தவர்

பெயர்:-
பதவி:-
கையொப்பம்:-

வங்கி முகாமையாளர்/ சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர்

பெயர்:-
கையொப்பம்:-
திகதி:-

பிரதேச செயலாளரின் சிபார்சு
கையொப்பம்:-
திகதி:-

**இணைப்பு – 05**

மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,
மாவட்ட செயலகம்,
…………………..
2018……………..

பணிப்பாளர்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப்பிரிவு,
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்.

**புத்தாண்டு விழா நடாத்தலும் மற்றும் மீளளிப்பு கோரலும் - 2018**

| | | | | **புத்தாண்டு விழாச் செலவு** | | |
|---|---|---|---|---|---|---|
| **தொ.இல** | **சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி** | **புத்தாண்ட விழா நடைபெற்ற திகதி** | **சேகரித்த வைப்புத் தொகை (ரூபா)** | **மேற்கொண்ட மொத்த செலவு (ரூபா)** | **மீள்நிதியீட்டம் கோரும் தொகை (ரூபா)** | **வேறு** |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| **மொத்தம்** | | | | | | |

தயாரித்தவர்
பெயர்:-
பதவி:-
கையொப்பம்:-

உறுதிப்படுத்தல்
(மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்)
பெயர்:-
கையொப்பம்:-
திகதி:-

**இணைப்பு – 06**

## <u>சிங்கள / தமிழ் புத்தாண்டு சேமிப்பு சேகரிப்புக் கணக்குகள் தொடர்பான பகுப்பாய்வு -2018</u>

| வங்கியின் பெயர் | வைப்புத் தொகையின் பிரகாரம் கணக்குப் பகுப்பாய்வு | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.999 க்கு கீழ் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா.1000 க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா. 5000 க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா.10000 க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா.25000 க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா.50000 க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா.1000 க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

தயாரித்தவர்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-

உறுதிப்படுத்தல்
பெயர்:-
ஒப்பம்:-
திகதி:-
பதவி முத்திரை இடவும்